## கே.எம்.சி.எச். மருத்துவமனையில்

# பார்க்கின்சன்ஸ், உடலியக்க சீர்குலைவு நோய்களுக்கு நவீன சிறப்பு சிகிச்சை

கோவை, ஜூலை 13: பார்க்கின்சன்ஸ் நோய், மூவ்மெண்ட் டிஸ்ஆர்டர் நோய் பரவலாக தற்போது அதிகரித்து வருகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனித்துவமிக்க சிகிச்சை கோவை கே.எம்.சி.எச். மருத்துவமனையில் வழங்கப்பட்டு வருவதாக மூளை நரம்பியல் சிகிச்சை, பார்க்கின்சோனிசம் மற்றும் உடலியக்க சீர்குலைவு சிகிச்சை நிபுணர் ஷியாம் பாபு கூறினார்.

மூவ்மெண்ட் டிஸ்ஆர்டர் என்பது நரம்புகளின் செயல்பாடுகள் மற்றும் இயக்கத்தில் ஏற்படும் பாதிப்புகள் ஆகும். இவை பொதுவாக இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றது. அதாவது அதிகப்படியான அசைவுகள் மற்றும் குறைவான அசைவுகள், இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் உறுப்புகள் நடைமுறை இயல்புகளை காட்டிலும் மாறுபட்டு சாதாரண செயல்களை கூட சரிவர செய்ய முடியாமல் இருப்பார்கள்.

எந்த வயதினருக்கும் இந்த நோய்களின் பாதிப்புகள் வரக்கூடும். மூளையின் ஒரு பகுதியில் உள்ள டொபமைன் என்னும் ஒரு வகை அமிலம் சுரக்கும் தன்மை அதிகரிக்கும் போதும், குறையும் போதும் இந்த பாதிப்பு ஏற்படுகிறது. பரம்பரை வழியாகவோ அல்லது மருந்து உட்கொள்வதின் விளைவுகளாலும், மற்றும் நாம் வாழும் சுற்றுப்புற சூழல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இது ஏற்படுகிறது. இத்தகு பாதிப்புகளினால் கை, கால், தோல் உள்ளிட்ட உடல் உறுப்புகளில் அதிகப்படியான நடுக்கம் ஏற்படும்.

இது குறித்து மூளை நரம்பியல் சிகிச்சை மற்றும் பார்க்கின்சோனிசம் கோளாறுகள் நிபுணர் ஷியாம்பாபு கூறியதாவது: இந்நோய் பாதிப்புகள் ஏற்படுவதற்கு முன்னர் சாதாரண வேலைகள் செய்யும்போது கூட நடுக்கம், அதிகப்படியான வியர்வை, தலை சுற்றல், தூக்கத்தில் கை மற்றும் கால்களை அசைத்தல், பேச்சில் குளறல், எழுத்து திறன் பாதிப்பு, மலச்சிக்கல், நுகர்வு தன்மை குறைபாடு, கைகளில் வலி உள்ளிட்ட அறிகுறிகள் தெரியும். இந்த அறிகுறிகள் தெரிபவர்கள் உடனடியாக தகுந்த உடலியக்க சீர்குலைவு சிகிச்சை மருத்துவர்களை அணுக வேண்டும். நோயின் தாக்கம் அதிகரிக்கும்போது தான் நாம் அன்றாட செயல்களைக் கூட செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. ஒரு சிலர் படுக்கையிலேயே தன் வாழ்நாளை கழிக்கும் அளவிற்கு பாதிப்புகளில் மாட்டிக்கொள்கின்றனர்.



டாக்டர் ஷியாம்பாபு

தற்போது பார்க்கின்சோனிசம் சார்ந்த நோய்களுக்கு அதிகமானோர் பாதிக்கப்படுகின்றனர். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் உடல் அசைவுகள் மிகவும் குறைவாக இருக்கும். சாதாரணமாக கைகளை அசைப்பதற்கு கூட மிகுந்த சிரமப்படுவார்கள். மேலும் இதில் டிரமர், அட்டாக்சியா, டிஸ்டோனியா, மயோகுளோனஸ், கொரியா உள்ளிட்ட பல வகைகள் உள்ளது. இவைகளை தகுந்த தொடர் சிகிச்சை முறையினால் கட்டுப்பாட்டிற்குள் வைக்க இயலும். இதன் சிகிச்சை முறைகள் மூன்று வகைளில் பிரிக்க முடியும். ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் தொடர்ந்து மருந்துகளை உட்கொள்ளுதல், பாட்டிலினம் டாக்ஸின் தெரபி, மற்றும் அதிக பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்கு டீப் பிரைன் ஸ்டிமுலேசன்ஸ் (டி.பி.எஸ்) அறுவை சிகிச்சையும் செய்யப்படுகின்றது. இது போன்ற நோய்க்கு பாதிப்பானவர்களை உடலியக்க சீர்குலைவு நோய் சிகிச்சை நிபுணர்களால் மட்டுமே கண்டறிய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. நோய்களின் தன்மைகளை பொறுத்து இதன் சிகிச்சை மற்றும் மருந்துகளின் மாற்றம் ஏற்படுத்தப்படும்.

பார்க்கின்சன்ஸ் நோய் போலவே மற்ற கோளாறுகளும் இருந்து விடுவது உண்டு.

எனவே எல்லோருக்கும் அறுவை சிகிச்சை தேவைப்படாது. மிகச் சரியான கணிப்பில் தான் பார்க்கின்சன்ஸ் நோய் கண்டுபிடிக்கப்படும். இதோடு அன்றி பல்வேறு உடலியக்க குறைபாடுகளுக்கு பாட்டிலினம் டாக்சின் ஊசி மருந்து சிகிச்சையும் தர வேண்டியுள்ளது.

இவ்வாறு ஷியாம்பாபு தெரிவித்தார்.